உ

ஸ்ரீராமஜெயம்.

ஆண்டியின்பகத் வேண்டினன் சித்தி

திருப்பதி

எழுமலை வெண்பா

ஒரு

பாகவத சிகாமணியாரால்

இயற்றப்பட்டது.

இது

திருப்பதி புஸ்தகவியாபாரம்

சித்தூர் மாரிசெட்டி ருத்திரைய்ய நாயுடு

அவர்களால்

சித்தூர் ஸ்ரீ பவானி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப் பட்டது.

1927.

(Registered Copy Right.)

[அணா 3

OFFICE OF THE REG...
6-OCT
MADRAS

Q22:417
N27
146875

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

அலமேலுமங்கா சமேத

ஸ்ரீ வேங்கடாசலஸ்வாமி துணை.

திருப்பதி

ஏழுமலை வெண்பா.

நேரிசைவெண்பா.

மனேகமலை பூமியெலாந் தோற்றிடினு
ருபபதியைப் போலாமோ தேடுங்கால்—விருப்புடன்
ணியத்தைச் செய்திருந்தாற் போய்மனமே நீதொழுது
பண்ணவினை போக்கிகொளப் பார்.

நூல்.

பூவிற் பெரியமலை பொன்னுலகோர் தேடுமலை
பாவிற் கிளகிப் பழுக்குமலை—மேவியசீர்
க்குமலை நிலவுலக மத்தனைக்கும்
பழு மலையே. 1

துலாவுமலை தேவர்குழாஞ் சூழுமலை
பெருமான் கிருபைப் பெருக்குமலை—தருமஞ்
செழிக்குமலை யன்பர் செய்தவினை யெல்லா
மொழிக்குமலை யேழு மலையே. 2

சொல்லற் கரியமலை சுரர்முனிவர் தேவர்முதற்
பல்லுயிர்க ளெல்லாம் பணியுமலை—எல்லை
யெங்கும்பிர காசமலை யெல்லாஞ்செய் வல்லபிரான்
தங்குமலை யேழு மலையே. 3

பூத்தமலர் வாசம் பொருந்துமலை யோகிகள்
காத்திருந்து நித்தங் கருதுமலை—நீதி
பார்த்தமலை யன்பர் பழவினையைப் போக்கச்
சிறந்தமலை யேழு மலையே. 4

ஏழுமலை வெண்பா.

தொண்ட ரகத்திற் றுளக்குமலை தூய்மையிலா
வண்டர்க் கிடுக்கண் வளர்க்குமலை — பண்டர்ம்
யுகந்தோ ரிருந்தமலை யூழ்வினையை மாற்றத்
தகுந்தமலை யேழு மலையே.

கோகனக மாது குலாவுமலை கோடியிலா
ஆகமங்க ளெல்லா மளக்குமலை — யோக
சித்த ரிருக்குமலை செல்வமலை சித்தஜணை
பெற்றமலை யேழு மலையே.

உள்ள வுலகெல்லா மோரடியாக் கண்டமலை
வெள்ளை மனத்தில் விளங்குமலை — கள்ளமிலா
ஞானமலை மோனமலை ஞானத் தபோதனருக்
கானமலை யேழு மலையே.

காண்டற் கரியமலை கௌரவராற் காய்ந்த
பாண்டவருக் கெல்லாம் பலித்தமலை — நீண்ட
உலகை யளந்தமலை யூடுருவி யெங்கு
மிலகுமலை யேழு மலையே.

செல்வ மளிக்குமலை சேணுலகங் காட்டுமலை
நல்லவருக் கெல்லாமே நல்குமலை — பொல்லா
மூர்க்கர் செருக்கை முறிக்குமலை யபயங்
கார்க்குமலை யேழு மலையே.

இட்டர்க் கிரங்குமலை யேதேது கேட்டாலுங்
கிட்டே நெருக்குங் கிருபைமலை — துட்டர்
குலத்தைப் பிரிந்தமலை கோவிந்தா வென்பாரைக்
கலந்தமலை யேழு மலையே.

வாழைக் கமுகு வளர்ந்தமலை ஞானக்
கோழைப் படாமுனிவர் கூடுமலை — ஊழை
யகற்றுமலை யன்ப ரகத்துமலை சர்வ
சுகத்துமலை யேழு மலையே.

பூவனங்க ளெங்கும் பூர்க்குமலை பூமலிந்த
காவனங்கள் சுற்றுங் கனிந்தமலை — தாவி
யருவி கலந்தமலை யன்ப ரகத்தறிவி
லிருந்தமலை யேழு மலையே.

குன்ற மெடுத்தமலை கோதண்டந் தாங்குமலை
அன்றரக்கர் கூட்ட மழித்தமலை—நின்று
வணங்குவார் தன்குலத்தை வாழ்த்துமலை மேலோர்க்
கிணங்குமலை யேழு மலையே. 13

கஞ்சமலர் வாவிமன் காரிருண்ட சோலைமலை
கொஞ்சுங் கிளிமயிலுங் கூவுமலை—மிஞ்சும்
கீதவொலி நாதங் கேட்குமலை சர்வஜெக
நாதமலை யேழு மலையே. 14

தப்பை முழங்குமலை தாதர்குழாஞ் சூழுமலை
யெப்போதுங் கற்பூர மேந்துமலை—கப்பணங்கள்
சாஞ்சரமாய் வந்து செலுத்துமலை மாந்தர்
நிறைந்தமலை யேழு மலையே; 15

இரும்பென்ன நெஞ்ச மிளகாத வஞ்சகரைக்
கரும்பாய் நசுக்கிக் கசக்குமலை—பெரும்பால்
அன்பரகக் கோயிலைவிட் டகலா மலையார்க்கு
மின்பமலை யேழு மலையே. 16

துளசி மணக்குமலை தூய்மனத்தா ரேறுமலை
களஞ்சியத்தி லேவிதியங் கட்டுமலை—யுளந்தான்
நொந்தார் முகத்தை நோக்குமலை செல்வந்
தந்தமலை யேழு மலையே. 17

கோவிந்தா வென்றபெருங் கோட்டம் ஜொலிக்குமலை
தாவிப் பணிந்தடியார் தங்குமலை—மேவி
என்னேரஞ் சூட மிலகுமலை யேனையோர்க்
கன்னைமலை யேழு மலையே. 18

கோபந் தணிந்து குளிர்ந்தமலை சர்வ
சாபவினை யாவுஞ் சதைக்குமலை—பாப
மெல்லா மகற்றுமலை யெல்லாச் சுகமளிக்க
வல்லமலை யேழு மலையே. 19

குங்குமமுங் களபக் குளம்பும் மிகத்திமிர்ந்த
மங்கையர்கள் வாசம் மணக்குமலை—யெங்கும்
கேசவா மாதவா கோவிந்தா வென்றிறைஞ்சி
பேசுமலை யேழு மலையே. 20

நாற்றிசையி லுள்ளோரும் நாடித் தினந்தொடர்ந்து
போற்றிப் பொருள்பணிதி போடுமலை—கீர்த்தி
சிறந்தமலை தொண்டர்களாற் செய்தபிழை யெல்லா
மறந்தமலை யேழு மலையே. 21

எட்டெழுத்தா யஞ்செழுத்தா யிருமூன்று ஆறெழுத்தாய்
தட்டர் வணங்குபல தோற்றமுமாய்—மட்டில்
ஏகப் பொருளா யெழுந்தமலை யட்டாங்க
யோகமலை யேழு மலையே. 22

காலைக் கதிரோனுங் கங்குலிலே சந்திரனும்
வேலைக் குளித்துவலஞ் செய்யுமலை—மேலாம்
உம்பர் முனிவோ ருயர்மா தவத்தரெலாம்
நம்புமலை யேழு மலையே. 23

அன்பர்களை வாவென் றழைக்குமலை யன்புடையா
ரின்புற்ற தெல்லா மீயுமலை—துன்பந்
துடைக்குமலை வானோர் துதிக்குமலை வேதியனைப்
படைக்குமலை யேழு மலையே. 24

சித்த மொருக்கால் நினைப்பார் நினைப்பிலெழும்
சித்தியென்ப தெல்லாஞ் செறிக்குமலை—அத்தி
மூலமென்ற போதே முளைத்தமலை மூர்க்கர்குல
காலமலை யேழு மலையே. 25

கூறுமொழிக் கெல்லாங் கோவிந்தா வென்றிறைஞ்சிப்
பேரைக் குறித்தெவரும் பேசுமலை—சீருடைய
அன்ன முகந்தோனும் ஆடுமயிற் சேவகனும்
மன்னுமலை யேழு மலையே. 26

புவிராஜர் முப்போதும் போற்றுமலை பொய்யறியா
தவராஜ ரெப்போதுந் தங்குமலை—கவிராஜர்
பாடுமலை பாட்டில் பதித்தவர மெல்லாங்
கூடுமலை யேழு மலையே. 27

திக்குவே றில்லையெனத் திருவடியிற் சார்ந்தாரை
யக்கரையாய் வாவென் றழைக்குமலை—மிக்க
கருணை மலிந்தமலை கருதும்போ தேயுதவுந்
தருணமலை யேழு மலையே. 28

ஊழ்வினையோ ராறுலு மோடிப் பணிந்தக்காற்
றூழ்வெல்லாம் நீக்கித் தணிக்குமலை—வாழ்வென்ற
இகத்துச் சுகபோக மியாவுங் கொடுக்குமதி
மகத்துமலை யேழு மலையே. 29

மாடேறும் பிஞ்ஞகனும் மயிலேறும் பெருமாளும்
ஏடேறும் வாணிக் கினியானும்—வீடேறு
முத்தரொடு சித்தர்களும் மூவிரண்டு லோகமெலாம்
நத்துமலை யேழு மலையே. 30

ஜெனகாதி மாமுனிவோர் சேருமலை வானுலகத்
தினமாதி யெல்லா மிருக்குமலை—மனுநீதி
யோங்குமலை யுள்ளன்பா லோங்குமடி யார்குடும்பந்
தாங்குமலை யேழு மலையே. 31

பொன்மகளை மார்பினிடம் பூண்டமலை யன்பர்கடம்
மின்பப் படிக்கெல்லா மீயுமலை—தொன்மறையும்
சொல்லுமலை வேதச் சோதிமலை யாயுரத்தெட்
டெல்லைமலை யேழு மலையே. 32

சீதமலர் காற்றஞ் செழித்தமலை யன்பருக்குப்
பாதமலர் வீடாய்ப் பலித்தமலை—மாதவர்கள்
சூழ்ந்தமலை மீனினமுஞ் சூரியனுஞ் சந்திரனுந்
தாழ்ந்தமலை யேழு மலையே. 33

பூமகளுஞ் சண்முகத்தைப் பூத்தவளும் வேதனுடை
நாமகளுஞ் சூழ்ந்து நயந்தமலை—தாமமணி
இந்திரனோ டட்டத் திசையாரும் வந்துதொழ
முத்துமலை யேழு மலையே. 34

செம்மான் றருமகளைச் சேர்ந்தசிவ சண்முகனுக்
கம்மானாய்த் தோன்றியவா னந்தமலை—பெம்மான்
மோகப் பசுங்கொடிக்கு மூத்தமலை யட்டசுக
போகமலை யேழு மலையே. 35

அஞ்ஞான மாமிருளை யகலத் துரத்திபர
மெஞ்ஞான வீட்டின்ப மீயுமலை—எஞ்ஞான்றும்
பன்னுமடி யார்மிடியைப் பற்றறவே நீக்குபசும்
பொன்னுமலை யேழு மலையே. 36

தொல்லைப் பிறவித்துயர் தூற்றுமலை துரியநிலத்
தெல்லைச் சுகமடியார்க் கீயுமலை—பல்லுயிருங்
கார்க்குமலை பக்திநெறி காப்பார் மனம்போலப்
பூர்க்குமலை யேழு மலையே. 37

ஆறாத புண்புரைக ளாற்றுமருந் தானமலை
தீராத் துயரனைத்துந் தீர்க்குமலை—மாறாத
பொன்னுலக வாழ்விற் பொருத்துமலை பொன்னுலகோர்
பன்னுமலை யேழு மலையே. 38

ஈரமிலா நெஞ்சத்தார் கிடுக்கண் ணியற்றுமலை
ஓரஞ்சொல் வார்குடும்ப மொழிக்குமலை—ஆரமலர்
சாற்றித் தொழுவார் சஞ்சலங்க ளெப்போதே
மாற்றுமலை யேழு மலையே. 39

அறமென்ப தில்லா வழுக்கடைந்த கள்வர்கடம்
முறமெல்லாம் போக்கி யொடுக்குமலை—மறவாமல்
சிந்திப்பார் நோக்கமெலாஞ் சீரோங்கச் செய்யுமதி
விந்தைமலை யேழு மலையே. 40

பார்மீது வாழ்ந்துபிறர் பசியறியார் செல்வாக்கை
நீர்மே லெழுத்ததுபோல் நீற்றுமலை—யார்மீதும்
நீங்காக் கருணைமலை நீடுலக மண்டாண்ட
மோங்குமலை யேழு மலையே. 41

அண்டமெலா முந்தியிலே ஆவென்று காட்டுமலை
பண்டையுக மெத்தனையோ பார்த்தமலை—தொண்டர்
உள்ளமெனுங் கோயிலின்கண் ணோங்குமலை வைகுண்ட
வள்ளல்மலை யேழு மலையே. 42

மெய்த்தவஞ்சேர் ஞானியெலா மேவுமலை மெய்யுடனே
கைத்தவங்களில்லாரைக் கடியுமலை—எத்தலமும்
கொண்டாடிப் போற்றுமலை கோவிந்தா வென்றேத்து
மண்டர்மலை யேழு மலையே. 43

ஆதிசிவ னல்வரம்பெற் றகிலம் மிகநெரித்த
காதகரை யெல்லாங் கண்டித்தமலை—சோதனையில்
பத்தருக்கு முன்னிருந்து பாதுகாத் தாண்டபர
முத்திமலை யேழு மலையே. 44

அடியேன் றுயர்படுமா வாபத்துக் காலமெலாங்
கொடியபிணி நீக்கிக் கொடுத்தமலை—படியிலிப்போ
கொத்தடிமை கொண்டென் குடும்பத்தைக் கார்க்கமனம்
வைத்தமலை யேழு மலையே. 45

வேண்டித் தொழவறியா விளையாட்டுக் காலமெலாம்
ஆண்ட துணைத் தாதா வானமலை— தூண்டும்
குருவாகி யென்னறிவிற் குடியாகி நல்லறிவைத்
தருகுமலை யேழு மலையே. 46

மிடியைத் துலைத்துநிதி மென்மே லளித்தடியார்க்
கடிமைப்புரியவருள் செய்தமலை—கொடிய
ஊழ்வினையால் வந்தபிணி யோட்டுந் துடைத்தென்னை
வாழ்த்துமலை யேழு மலையே. 47

தஞ்சந் தஞ்சமெனத் தான்பூட்டி வந்தரை
யஞ்சலஞ்ச லென்று தரிக்குமலை—கொஞ்ச
கோரத்தி லேமனனோய் நீக்கியே காத்தருளும்
பாரமலை யேழு மலையே. 48

அரிவோம் நமோநாராயணா வென்பாருக்
குரியவா மெல்லாங் கொழிக்குமலை—பிரியமுடன்
யென்றுமஷ்ட லட்சுமியு மீஸ்வரியுஞ் சரஸ்வதியும்
நின்றமலை யேழு மலையே. 49

என்னா லுரைப்பதினி யென்னறிவே னுள்ளதெலா
முன்னா லறியா தொன்றுளதோ—பன்னாளும்
காத்ததுபோ லின்னுமெனைக் காத்தருள வென்கனவிற்
பூர்த்தமலை யேழு மலையே. 50

மாசி யிறங்குமலை மழைக்கால்க லோமலை
தேசிகனார் மகிமை தெரியுமலை—வாசமலர்
மணக்குமலை யுண்டி துகை மலைமலையாய் வந்தாலுங்
கணக்குமலை யேழு மலையே. 51

சொன்னத் துகையிலொரு செம்பு குறைந்தாலுங்
கன்னத்தி லேயடித்து கட்டவைக்கும்—அன்னவுணை
இருப்ப நடத்துமலை தஞ்சமென்ற பேர்மேல்
விருப்பமலை யேழு மலையே. 52

எழுமலை வெண்பா.

கட்டுக் துகையிலொரு காசு குறைந்தாலும்
வட்டியுடனே திரும்ப வாங்குமலை—எட்டுத்
திசையாரை யெல்லாந் திரளா யழைக்குமதி
வசியமலை யேழு மலையே. 53

பொன்வயிர பூஷணத்தைப் போடுவதாய் மலைக்குவந்த
பின்னால் துகைகொடுத்த பேய்மனதை—முன்னால்
உழைத்தபிணி யெல்லா முண்டாக்கி யட்சணமே
யழைத்துமலை யேழு மலையே. 54

மன்னரொடு மந்திரிமார் மகத்தர்தி யாரானுஞ்
சொன்னபடி வாங்குஞ் சூட்சமலை—எந்நேரம்
தங்கங் குவியுமலை தஞ்சமென்றோர் மேலாசை
பொங்குமலை யேழு மலையே. 55

நாமந் துலங்குமலை நாற்றிசையுங் கோவிந்த
நேமம் பெரியோர் நிறைந்தமலை—க்ஷேமம்
ஈயுமலை யடியா ரிடுக்கமெலாந் தீரவருட்
செய்யுமலை யேழு மலையே. 56

600 009

சங்கீத மேளஞ் சதாகோட்டஞ் செய்யுமலை
யெங்குங்கோ விந்தமய மெய்துமலை—மங்கையர்கள்
திரளா யுலாவுமலை தெய்வ மகத்துவமே
நிறைந்தமலை யேழு மலையே. 57

வடக்குமலை யென்று வழங்குமலை தென்கீழ்க்
குடதிசையோ ரெல்லாருங் கூடுமலை—யடக்கமதில்
இருந்தாரை யெல்லா மிழுக்குமலை நோய்க்கு
மருந்துமலை யேழு மலையே. 58

நிஜமா யிராப்போலே நெடுங்கதிரைத் தான்மறைத்து
விஜயனுக்கு வெற்றி விளைத்தமலை—புஜபலத்தை
நம்பி யெளியோர்மேல் காப்புழுக்குந் துட்டருக்கு
வம்புமலை யேழு மலையே. 59

முத்திக்கு வித்தாய் முளைத்தமலை மூவுலகும்
பத்திபுரி வோர்க்குப் பலிக்குமலை—சித்தியெலாம்
மெய்யாய் விளங்குமலை மெய்யறியாப் பொய்யருக்கு
பொய்யுமலை யேழு மலையே,

எழுமலை வெண்பா.

எட்டெழுத்தாய் லோகமெலா மெங்கும் நிறைந்தமலை
துட்டருக்குத் தோற்றாத் தூரமலை—இட்டமுள
அன்ப ருளத்தி லமர்ந்தமலை யன்புடையார்க்
கின்பமலை யேழு மலையே. 61

அவ்வவ் வுலகோ ராசாரம் போல்குறிப்பு
வெவ்வே றுருவாய் விரிந்தமலை—எவ்வுயிரும்
தானாய் விளங்குமலை தாய்க்கும் பெரியதா
யானமலை யேழு மலையே, 62

வேலை வளைந்தமலை விரிகதிரும் சந்திரனைச்
சோலையிலே காட்டுஞ் சொகுசமலை—ஆவிலைமேல்
சற்றே துயின்றளவில் சர்வவுல கத்தனையும்
பெற்றமலை யேழு மலையே, 63

மீனினங்க ளாமிருபத் தேழும் நவக்கிரகர்
தானுங் குலவித் தழுவுமலை—வானுலகிற்
றேடரிய தேவர்களும் தெய்வசபை மாதர்விளை
யாடுமலை யேழு மலையே. 64

தெய்வ மிருக்குமலை தெவ்வீக மோங்குமலை
மெய்தவஞ்சேர் புங்கவர்கண் மேவுமலை—கைதவத்தை
பூண்டார்கள் சூழுமலை பூதலத்தி லேழைகுடி
யாண்டமலை யேழு மலையே. 65

எழுநிலமு மேழு மலையாய் வளர்ந்தமலை
பழுதருபொன் னாடாய்ப் படர்ந்தமலை—தழும்பேற
துதித்தார் மனத்தகத்திற் றோற்றுமலை யான்றோர்
மதித்தமலை யேழு மலையே. 66

வேதக் கொடிமுடியாய் விளங்குமலை வேதத்தின்
பாதமுத லுலகாய்ப் படர்ந்தமலை—சீதமலர்
பூணுமலை யன்பர்கள்செய் பூசை பலனளவே
காணுமலை யேழு மலையே. 67

பச்சைமலை பசசைப் பவளமலை பல்லுலகும்
மொய்ச்சமலை லக்ஷ்மீ மோகமலை—யச்சமெலாம்
தீர்க்குமலை தீவினையைத் தினகரனார் முன்பனிபோல்
பேர்க்குமலை யேழுமலையே. 80

எழுமலை வெண்பா.

நீங்கா வுடற்பிணியை நீக்கவழி காணாமல்
வேங்கடவா யுன்னடியை வேண்டினேன்— பாங்குபெற
முற்போ தெனைக்காத்த முறைபோல் மனமிரங்கித்
தற்போதும் நீகருணை தா.

நாசியின்மேல் வந்தபிணி நாசப் படுத்தியுனைப்
பேசுமடி யார்புகழைப் பேசவருள்—தேசிகனே
என்போல மானிடர்முன் னேகமன மஞ்சுகிறே
னுன்பாதம் நம்பியுமீ துண்டோ. 70

பண்டிதரார்க் கற்றதெலாம் பர்த்துப்பார்த் தென்பிணியை
கண்டிக்க வாகாமல் கைவிட்டார்—எண்டிசையும்
தாவித் தொழும்பெரிய தாதாவே நீயிரங்கிப்
பாவியெனை யாதரிக்கப் பார். 71

மூக்காலு முன்னடியை மெய்யாக நம்பினவ
னெக்கால மும்மறக்கே னுண்மையிது—தற்காலம்
அஞ்சும் படிக்கென்னை யாட்டுகிற வூழ்வினையைத்
துஞ்சும் படிச்செய் துணை. 72

ஊழ்வினையைத் தாங்காம லுள்ளுருகி நோவதிலும்
பாழ்கிணற்றில் வீழ்ந்தாலும் பண்பென்றே—தாழ்வடைந்த
என்முகத்தைப் பாராம லெங்ஙனமோ நீயிருந்தா
லுன்னைவிடப் பின்னா ருரை. 73

14685

எள்ளுக்கு ளெண்ணெயைப்போ லெங்கும் நிறைந்துளதாய்
தெள்ளுமறை யெல்லாந் திடமுரைக்க—உள்ளமதில்
என்னேர முன்னா ளிறைஞ்சுமெனைக் காராட்டாற்
பின்னாரோ தெய்வமினிப் பேசு. 74

காணுமிட மெல்லாமுன் காப்பென்றே பிரகலாதன்
தூணு மிடத்துந் லுதிக்குங்கால்—ஆணவஞ்சேர்
இரணியனைத் தீர்த்ததுபோ லென்பிணியை மாற்றிதாத்
தருணமிது தற்காத் தருள். 75

பழையவடி யாரிருந்த பக்திவயி ராக்கியம்போல்
தொழவறியா வேழைமுறை தள்ளாதே—நிழலறியா
புழுப்போல் துடித்துனது பொன்னடிக்குத் தஞ்சமென்றே
னழுக்கறவே செய்வா யருள்

—0

உள்ளமுட னேயெனது வூழ்வினையும் நீயறிவாய்
கள்வனே யானாலுங் கடனுனக்கே—எள்ளளவு
உன்கருணை டென்மே லுதிக்குமே யாமாகில்
பொன்னாகு மென்னுடைய பொந்தி. 77

வயர்நிறைந்தாற் பானை வாய்மூட னென்றசீர்
நயவத் றளித்த தழகாமோ—நயமலிந்த
குணமுடையா தொண்டர் குலமுழுதுங் காக்கும்
மனமுடையாய் கேளேன் மனு. 78

மனுவென்ப தென்னுடைய மாபிணியைத் தீர்த்துத்
தினமுன் றிருவடியைத் தொழுதேத்த—அனவரதம்
புத்தி யெனக்களிப்பாய் புகழ்மலிந்த வெங்கடவா
மற்றதைவேண் டாதென் மதி. 79

அன்ன மளித்தா யகமளித்தா யாடைபணி
பொன்னும் புகழு மிகவளித்தாய்—என்னுடம்பில்
பிணியளித்தால் மற்றதெலாம் பாவிப்ப தேங்கோ
துணையிருந்து என்னோய் துலை. 80

செல்வ மகளைத் திருமார்பி லேதரித்து
வல்ல புகழ்படைத்த வேங்கடவா—தொல்லையினால்
நொந்துவந்து உன்னடியை நோக்கிச் சரணமென்றால்
எந்தவினை நிற்கும் எதிர். 81

புண்ணும் புரையுடனே பேய்பிடித்த நெஞ்சுக்கு
கண்ணுந் திரையாமா கலியுகத்தி—லென்பிழைப்பு
சொன்னால் நகையாகும் சுவாமிதிரு வேங்கடவா
என்னென் றுரைப்பே னிது. 82

தொண்டை முதுகு தடைநாசி மேல்விரணங்
கொண்டு மெலியுங் குறையெதுவோ—கண்டறிந்து
காத்தருள் வேணுமையா கடவுளே வேங்கடவா
யார்க்குரைக்கபன் சொல்வா யறி. 83

அரியுஞ் சிவனு மகிலபுவ னம்படைக்கும்
பெரியவிதி யும்முருகப் பெம்மானும்—பிரிவாகும்
அறுசமய தேவதையு மாயிரத்தெட் டண்டமெலாம்
நிறைந்ததுநீ தானே ஹரி. 84

பொய்வழியாற் சேகரித்த பொருளின்வினி யோகமெலாம்
மெய்வழியிற் சேர்க்காமல் மெய்குலைந்தேன்—உய்யும்வழி
காட்டிக் கொடுப்பதுஉன் கடமை திரு வேங்கடவா 85
நாட்டினில் வேறேது நதி.

உன்னைப் பணிந்தார்க்கு ஊழேது தாழ்வேது
பின்னை கிரகப் பிரட்டேது—பன்னலமும்
கூடுமென்றே கீதையெலாங் கூவுதலால் வேங்கடவா 85
தேடினே னென்மதியைத் தேற்று.

கள்ளக் கலிமதியால் காலமெலாம் நாயடியேன்
உள்ளத்தை யுன்பா லொடுக்காமற்—பள்ளத்தில்
வீழ்ந்தகஜம் போலே விம்முகிறேன் வேங்கடவா 87
தாழ்வகல நீகருணை தா.

ஆசைப் பெருக்கா லறிவுகெட்டு நின்புகழைப்
பேசாத தாலல்லோ பாழானேன்—தேசத்தார்
முன்செல்ல வென்றால் மெலியுதையோ வேங்கடவா 88
என்செய்வே னென்னோ யெடு.

உலகபோ கத்திற் குரித்தான காலமதில்
தலைவிதிதா னிப்படியுந் தானுண்டோ—நிலமனைத்தும்
பாதத்தி னாலளந்த பாரமலை வேங்கடவா 89
சோதித்து நீதா சுகம்.

பாழும் பிரமனவன் படித்தபடிப் பென்னாவோ
ஊழை யொருக்காலே யூட்டுவனா—ஆழிதயில்
கொண்டப்போ துந்திவழி கோகனத்தில் வந்தவனை 90
தண்டித் தெனைக்காத் தருள்.

உன்மகிமை கேட்க வுளநடுங்கு தாகையினால்
யின்னுமுனை மறக்க வெண்ணுவனோ—மன்னர்முதல்
அஞ்சிப் பணியுமெந்த னாண்டவனே வேங்கடவா 91
கொஞ்சங் கருணை கொடு.

பூவி லயனைப் பெற்றெடுத்த தாதாநீ
பாவியென் றெனைப்பா ராட்டாதே—தேவியொடு
சொற்பனத்தில் வந்த சொந்தம்போற் சோதித்து 1—0
அற்பவினை தீர்த்தா தரி:

என்கொடுமை யத்தனையு மெழுதப் பொழுதுண்டோ
உன்னடிமை யென்றே யுரைப்பதலால்—பின்னொன்றும்
பேசவறி யேனுலகிற் பெரியமலை வேங்கடவா
தாசரைப்போ லென்னையுமே தற்கார், 93

தற்கார்க்க வேணுமென்று தஞ்ச மபயமென்று
மூக்கால் வலமாகி முன்னின்றேன்—மிக்காக
என்னபிழை செய்தாலு மெல்லாம் பொறுத்தருளி
ஜென்மவினை தீரவருட் செய். 94

ஆண திலும் பெண்ண திலு மடியேனைப் போல்கொடியோர்
காணவரி தென்றேநீ கண்டாலும்—வீணாக
தள்ளாதே யென்னபயந் தங்கமலை வேங்கடவா
கொள்ளாதே யென்மீது கோபம். 95

உத்தனுக்குக் கோப முண்டானா லுன்னெதிரே
வந்து தணிக்கவழி யார்க்காகும்—சந்ததமும்
சேய்பிழைக ளத்தனைதான் செய்தாலு மீன்றெடுத்த
தாய்பொறுக்க வல்லோ தகும். 96

இத்தனைநாள் நினைக்கவிலை யென்றெண்ணி யுன்மனதில்
வைத்து வருமம் வளர்த்தாதே—மெத்தவுநான்
நொந்தேன் மெலிந்தே னேக்கிவந்தேன் கோவிந்தா
சந்ததமு முன்றாள் சரண். 97

கோவிந்த னாமம் கோருமடி யாருக்குப்
பாவந் தொலையும் பதங்கிடைக்கும்—ஆவலெலாம்
கைக்கூடும் பிணியகலும் காலையிளந் தேகம்போல்
மெய்க்கூடும் மெய்யா மிது. 98

அலமேலு மங்கைக்கு ஆசைமண வாளா
உலகமிரண் டேழுக்கு மொருதகப்பா—நிலமதனில்
என்குறைக ளெல்லா மிணையடியி லொப்புவித்தேன்
பன்னலமுங் கூடவருட் பண். 99

குற்றங் குறைபலவாக் கோடிபிழை செய்தாலும்
முற்றும் பொறுத்து முகங்கொடுத்து—சற்றேநீ
கருணை பொழிந்தென் கரும்ப் பிணிநீக்கி
டே. பொருளும் புகழும் பேரழி. 100

ஆண்டுக் கொருக்கா லடியேன் திருமலையை
வேண்டித் தொழவரமும் வேண்டுமெனக்—காண்டவனே
செய்தொழிலும் சீவனமும் சீராய் செழித்துதினம்
கைதவமு மோங்கிவரக் கார். 101

துளபமணி மார்பா துவாரகையில் வாழ்முகுந்தா
களபமுலை யலர்மேற் கண்ணாளா—வளமலிந்த
வடக்குமலை கோவிந்தா லடிமைநெடு நாட்பட்ட
யிடுக்கமெடுத் தே யெரி. 102

வாத வலியும் வளர்மேகப் புண்புரையும்
சீத விரணத்தின் சங்கடமும்—ஆதவனை
கண்டபனி போலே கடிகையிலே மாற்றியுந்தன்
தொண்டாந் தொழிலெனக்குத் தா. 103

வைப்பா ருனியமா வல்லதுமுன் னூழ்வினையா
இப்பிறப்பி லேதேனுஞ் செய்தேனோ—எப்போதான்
துலையுமிது வேங்கடவா துரரியக் கடலையே
யலையுகின்ற வேழைநெஞ்சை யாற்று. 104

பெற்ற அப்பா பெரியப்பா என்விதிக்கு
மற்றாரைப் போயடுத்து மல்லிடுவேன்—கற்றதெலாம்
சொல்லி யபயமிட்டுச் சூழ்ந்தேனே யுன்மனது
கல்லா யிருந்தாலுங் கரை. 105

உண்டு உடுத்தி யுலகத்தார் போற்சுகத்தை
கண்டு களிக்காமற் காலமெலாம்—பண்டைவினை
பட்டு மெலியவா பெற்றெடுத்தாய் வேங்கடவர்
கெட்டதெலாம் போதுமினிக் கார். 106

முன்னால் முறைபேசி முகமறைந்த தட்சணமே
பின்னால் கெடுவினைக்கும் பேயர்களை—யுன்னுடைய
சக்கரத்தி னாற்சிதைத்து சத்துருவைப் பாழாக்கி
துக்கமறச் செய்வாய் துணை. 107

வஞ்சநெஞ்சத் தீயரெலாம் வந்துவந்து என்பிழைப்பை
கொஞ்சமுள வறிந்து கொண்டவுடன்—அஞ்சாமல்
மோசக் கருத்தால் முறைபிறழும் பாவிகளை
நாசப் படுத்துமுயல் நாதா.

தேடவைத்தாய் நின்னடியைத் தேடுந் திறமைதந்து
பாடவைத்தா யுள்ளந் தனிற்பதிந்து—ஆடலெலாம்
நீரவைத்தாய் பிணிமுதலாய் தீர்த்து சகலசுகம்
சேரவைத்தா யுன்றன் செயல். 109

ஆத்திரத்தி னாலே யடியே னுரைத்ததெலாம்
தோத்திரமாய்க் கொண்டு துணைபுரிந்து—பாத்திரமாய்
என்பிணியெல் லாங்களைந்து எழைகுடி காப்பாற்ற
லுன்கடமை யீதொன்றே யுண்மை. 110

அறிவில்லாச் சேயுரைத்த ஆசைவெண்பா நூற்றிபத்தும்
பொருளல்ல வானாலும் பூண்டருளித்—தெருளுடைய
மூத்த ருரைத்தபழ மெயத்ததிபோ லாதரித்து
பத்தியெனக் குதயம் பண். 111

எழுமலை வெண்பா,

முற்றுப்பெற்றது.

ஸ்ரீ வேங்கடேஸ்வரசாமிபாதமே துணை.

ஸ்ரீ லக்ஷ்மீசமேதனுக்கு நமஸ்காரம்.

கலிவிருத்தம்.

அச்சுதா ஹரிகேசவ மாதவா
பச்சை மின்கொடிப் பார்வதிமுன்னவா
இச்சைமூன்றதி னாற்பிணி கொண்டவென்
லச்சைதீர்த்தருள் லக்ஷ்மீ சமேதனே.

அலமேலுமங்காசமேத

[illegible]ங்களம்.

[illegible] சென்னை-600 008. 146825

ஸ்ரீ பவானி அச்சுக்கூடம், சித்தூர்.

விளம்

கவனிக்கவேண்டி

திருப்பதிஸ்தலம் வரக்கூடிய கன
க்கும் தெரிவித்துக்கொள்வதென்ன வெ
திவ்வியக்ஷேத்திரமகத்துவம் என்னும்
தயார்செய்துஇருக்கிறது. பணங்களை வி
மல் ஜாகிரதையாய்யிருக்கவேண்டியது. தி
க்ஷேத்திரத்தின் மகத்துவம் என்னும் புஸ்
தால்தெரிந்துகொள்ளலாம்.

ஸ்ரீ வேங்கடேஸபெருமாளுடைய சரித்திரத்தை
மேலுபத்மாவதியார் ஜன்மித்து ஸ்ரீ வேங்கடேஸபெரு
கல்யாணம் செய்துகொண்ட சரித்திரம் திருப்பதி திருமலை
விய ஸ்தலங்களிலிருக்கும் தீர்த்த மகிமை அநேகமான பக்
கள் த்தயாத்திரைசெய்து மோக்ஷமடைந்தவர்களுடைய
ஸ்வாமிகளுடைய லீலைகளும் அனேகமான புண்ணிய
கள்செய்யப்படும். தர்மகைங்கரியங்களும் அவர்கள்
ருக்கும் சத்திரங்களும் அன்னதான சத்திரங்களும்
துவைக்கபட்டவர்களுடைய பெயர்களும் ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு
தோரும்நடந்துவரும்பிர்மோர்சவங்களும்வஸந்தோர்சவம்
ர்சவம் திருப்பதி திருமலை திருச்சானூர்வகைரா யிடங்
தவஸ்தானத்தில் செலுத்தவேண்டிய விபரங்களும் அதின்
ஒவ்வொரு விஷயங்களும் யெவ்வளவுதுகை கட்டவேணும்
விபரங்களும் மேல்கண்டபுஸ்தகமூலமாய் தெரிந்துகொள்
.

விஸ்வரூப படங்களுடன் 60 பேஜியுள்ள பெரியபுஸ்த்தகம்
0—8—0 புஸ்த்தகம்வேண்டியவர்கள் சித்தூர் மாரிசெட்டி
ந்தராஜுலு நாயுடு திருப்பதி, யென்று வி. பி. யில் வரவ
துகொள்ளலாம்.

புஸ்த்தக விளம்பரம்.

	ஸ்ரீ வேங்கடேஸ்வரர் பக்த்தவிஜயம் வசனகாவியம்	3—0—0
	ஸ்ரீ திருவேங்கடஸ்தலபுராணம் யாத்ரைவைபவம்	0—5—0
3	தேர்வண்டிக்கால்சரித்திர கீர்த்தனை	0—8—0
4	ஷை வசனகாவியம்	0—2—0
5	திருப்பதி திருமலை திவ்வியக்ஷேத்திரமகாத்மியம் 60 பேஜியுள்ள யாத்திரை விஷயமுள்ளதும் விஸ்வரூப படங்களுடன் பெரியபுஸ்த்தகம்	0—8—0
6	திருப்பதி ஏழுமலையான் சாக்ஷிசொல்லிய சரித்திரம்	0—1—0

...ங்கடேஸ்வரபக்திரசபஜனைகீர்த்தனை	0—3—0
...சானூர் அலமேல்மங்கத்தாயார்பஜனைகீர்த்தனை	0—2—0
...ங்கடேஸ்வர தோத்திரமாலை கோவிந்தராஜர் சிந்து கும்மி அடங்கியுள்ளது	0—1—0
...வெங்கடேஸ்வரர் அஷ்டோத்திரம்	0—1—0
கெருடபுராணம் வசனம்	0—12—0
மகாவிஷ்ணு பக்தவிஜயம்	2—0—0
நாலாயிரபிரபந்தம்	4—0—0
...ண்டரிநாதர் பஜனைகீர்த்தனை	0—4—0
ஆ... னை கீர்த்தனை	0—5—0
ராமதாஸ்சரித்திரம்	0—6—0
...கஷ்மகாத்மியம்	0—4—0
...ப்பாவை	0—1—0
...ணர் சரித்திரகீர்த்தனை	0—8—0
...ளாஸ்த்திபுராணம்	0—6—...
...ல்ரர்என்னும் வாந்திபேதிநிவர்த்திசெய்யும்மந்திரம்	0—4—...

இன்னும் எங்களிடம் அனேகவிதமான புஷ்த்தகங்களும் தமிழ் தெலுங்கு இவைகளிலும் உள்ளது. ஸ்கூலுக்குரிய புஸ்த்தகங்களும் பென்சில்வகைராக்களும் குழந்தைகள் விளையாட்டுக்குள்ள சாமான்கள் ...விவர்மா படங்களும் ஜர்மன் இங்கிலீஷ்படங்களும் போடோபட...களும் கண்ணாடிசட்டங்களும்போட்டு தயார் செய்துகொடுக்கப்படும்.

எமதுவிலாசம்:— மாரிசெட்டி கோவிந்தராஜுலு நாயுடு,
புக்ஷாப்,
குருவப்ப நாயுடு சத்திரம், சித்தூர்.

திருப்பதி திருமலை வகைராபுஸ்த்தகங்கள் வேண்டியவர்கள் கீழ்கண்டவிலாசத்திற்கு எழுதியாகிலும் நேரிலாவது மொத்தமாகவும் சில்லரையாகவும் பெற்றுகொள்ளலாம்.

மாரிசெட்டி ருத்திரைய்ய நாயுடு,
புக்ஷாப்,
பஜார்வீதி, திருப்பதி.